வரைவு

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல:5/97(11)

எனது இல:எகஸ்சீயு/2/(111)7
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.
சுதந்திர சதுக்கம்
கொழும்பு-07.
1998.12 30 ஆந் திகதி.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்
திணைக்களத் தலைவர்களுக்கும்.

## அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான காப்புறுதித் திட்டமொன்றை ஏற்படுத்தல் (அக்ரஉஹார) .

மேற்படி விடயத்துடன் சம்பந்தப்பட்ட 1997.01.31 ஆந் தேதிய 05/97 ஆம் இலக்க சுற்றறிக்கைகளுக்கு மேலதிகமானது.

02. அக்ரஹார காப்புறுதி திட்டத்தை நடைமுறைப்படுத்துகையில் பின்வரும் விடயங்கள் தொடர்பில் இலங்கை காப்புதிக் கூட்டுத்தாபனத்துடன் உடன்பாட்டுக்கு வந்திருப்பதுடன் அதன்படி செயற்படுமாறு தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(1) **சாதாரணமான குழந்தைப் பிரசவமொன்றுக்காக**

(அ) அரசினர் மருத்துவசாலையொன்றில் தங்கியிருந்ததால் நாளொன்றுக்கு ரூபா 250/- வீதமான ஒரு கட்டணமொன்று மருத்துவசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நாட் கணக்குகளின்படி செலுத்தப்படும். இக் கொடுப்பனவு ஆகக்கூடிய ரூபா 3000/-ஆக வரையறுக்கப்படும்.

(ஆ) தனியார் மருத்துவசாலையொன்றில் தங்கியிருந்திருந்தால் நாளொன்றுக்கு ரூபா250/-வீதமான கட்டணமோ அல்லது மருத்துவசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நாட் கணக்குகளுக்குரிய பில் பத்திரங்களில் குறிப்பிட்டிருக்கும் கட்டணமோ செலுத்தப்படும். இக் கொடுப்பனவு ஆகக் கூடிய ரூபா 3000/-ஆக வரையறுக்கப்படும்.

03. கண்மருத்துவ நிபுணர் ஒருவரால் வழங்கப்படுகின்ற சான்றிதழ்கள் தவிர்ந்த வேறு சான்றிதழ்களை பயன்படுத்தி பெற்றுள்ள மூக்குக் கண்ணாடிகளுக்காக பணம் மீளநிரப்பப்பட மாட்டாது.

04. வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று அல்லது மருத்துவசாலைக்கு அனுமதிக்கப்பட்டு 90 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட உரித்துக்களை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் உரிய அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

05. அரச உத்தியோகத்தர்களின் காப்புறுதித் திட்டத்தை செயற்படுத்துகையில் மேலும் தாமதங்கள் ஏற்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துக் கொண்டிருப்பதால் அந்நிலைமையை தவர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒப்பம் / பீ.ஏ.சேனாரட்ன
செயலாளர்
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.

incor/11/1